# நட்சத்ர முன்னேற்றக் கழக கொடி விளக்கம்

இந்த மூவர்ணக் கொடி அடிப்பாகம் சிவப்பு நடுப்பாகம் மஞ்சள், மேல்பாகம் பச்சை.

அடிப்படையில் சிகப்பு வண்ணத்தில் ஏழு குதிரைகள் உச்சி சூரியன் பின்னணியில் மேகமாக வாஸ்து தோஷங்களை நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளன. இது ஒவ்வொருவருடைய மனத்திலுள்ள காம, குரோத, லோப, மோக, மத. மார்ச்சரிய, பாவ தோஷங்களை விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

நடுவிலே உள்ள மஞ்சள் பின்னணி “ ந ம சி வ ய ” என்னும் எழுத்துக்கள் பஞ்ச பூதங்களை சித்தரிக்கிறது.

- மண்ணிலான நல்ல பானையை தட்டிப் பார்த்து வாங்குகிறோம். அந்த சத்தம் ‘நங் நங்’ என்று கேட்கும். எனவே ‘ந’ மண் சம்மந்தப்பட்டது.
- ‘ம’ என்பது புயலோ, காற்றோ, தென்றலோ ‘ம’ என்ற சத்தத்தை கொடுக்கும்.
- ‘சி’ என்பது யாக ஜோதியில் சப்த அக்னியில் ‘சி’ என்ற சீற்றமான ஒளி தென்படும்.
- ‘வ’ என்பது அருவிகள் விழும் போதும், கடல் அலைகள் மற்றும் ஆற்று வெள்ளத்தில் வருகின்ற ஓசை ‘வ’ ஆகும்.
- ஆகாயத்தில் பல்கிப் பெருகி பரவி இருக்கும் ஒளி ‘ய’ ஆகும். எனவே இயற்கை இந்த ஐந்து ஒளிகளை சித்தரிக்கிறது.

மேல்பாக காலத்திற்கேற்ற முதல் குறியீடு ‘பகிர்’ என்பது பகிர்ந்து உண்ண வேண்டும் என்பதை குறிக்கிறது.

அடுத்து ‘77’ என்ற குறியீடு சரணாகதிக்கான பாதரட்சகைகளை குறிக்கிறது.

சரணாகதி முடிந்தபின் வெற்றியைக் குறிக்கும் குறியீடு அந்த கட்டைவிரல் ஆகும்.

எனவே இந்த ஆன்மீக அரசியலை பறைசாற்றும் விளக்கப்படமே இந்த கொடி ஆகும்.

**நட்*சத்*ர முன்*னேற்*றக் கழகம்* வாழ்*க!**